**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**முன்னிலை – திரு.பி.எஸ். ரஸ்கின்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,**

**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.**

**2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14–ம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.3/2025 in O.S.391/ 2023**

ரஞ்சனி – மனுதாரர் / பிரதிவாதி

/ எதிர் /

வீனா – எதிர்மனுதாரர்/ வாதி

இவ்வுத்தரவு என் முன்பு 25.09.2025–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.மலர்கொடி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.அசோக்ராஜன் அவர்கள் முன்னிலையாகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்………

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் Order 26 Rule 10 r/w Sec 45 of 151 CPC–ன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

***1.1.*** மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். தாவா வழக்கானது, வாதியிடம் பிரதிவாதி கடந்த 11.06.2022ம் தேதி குடும்ப கடன்களை அடைப்பதற்காகவும், சில்லறைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் வாதியின் வீட்டில் வைத்து ரூ.7,00,000/ பணம் நேரில் பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு 24% வட்டி வீதம் கூடிய வட்டியும், அசலையும் திருப்பி கொடுத்துவிடுவதாக சொல்லி பணம் பெற்றதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / பிரதிவாதியின் வழக்கானது, 11.06.2022–ம் தேதி வீனா வீட்டிற்கு போனதாகவும் அன்றைய தினம் பிரதிவாதி வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தார் என்பதாகும். கடந்த 11.06.2022–ம் தேதி வாதி போன் மூலம் மனுதாரரை கூப்பிட்டதாலும், அதன் அடிப்படையில் வாதி வீட்டிற்கு போனதால் அப்போது சாட்சி முன்பு பிரமிசாரி நோட்டில் கையெழுத்து செய்ததாக எதிர்மனுதாரர் / வாதி பொய் சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர் / பிரதிவாதி கடந்த 11.06.2022ம் தேதி வாதியின் வீட்டிற்கு போகவும் இல்லை. பணமும் பெறவில்லை. பிரமிசாரி நோட்டில் கையெழுத்து செய்யவும் இல்லை.

அடுத்ததாக, மேற்படி பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து மனுதாரர் / பிரதிவாதியுடையது அல்ல. எனவே, வக்காலாத்து மற்றும் எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்தோடு வா.சா.ஆ.1–ல் உள்ள கையெழுத்தை ஒப்பீடு செய்ய அட்வகேட் கமிஷனரை நியமனம் செய்ய வேண்டும் என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிருரையின் சுருக்கம்:–**

மனு அனுமதிக்கத்தக்கதல்ல. வாதி தரப்பில் சாட்சி முடிவடைந்துள்ள நிலையில் பிரதிவாதி இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே மனுதாரர் / பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்ட மனுதாரர் / பிரதிவாதி பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. உண்மையில் புரோநோட்டில் மனுதாரர் / பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றால் உடனடியாக பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பார். மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என குறுக்கு விசாரணை எதுவும் செய்யப்படவில்லை. மாறாக, ரூ.7,00,000/–கடன் கொடுப்பதற்கு வசதி இல்லை என்று தான் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் / பிரதிவாதி குறிப்பாக அவருடைய கையெழுத்தை எதிர்வழக்குரையில்

மறுக்காத போது மனு அனுமதிக்கத்தக்கதல்ல. வழக்கு விசாரணையை காலம் கடத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுவை தள்ளுபடி செய்யக் கோரி எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

***3.1.*** முதலாவதாக, மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். தாவா அசல் வழக்கானது, எதிர்மனுதாரர் / வாதியால் மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக ரூ.7,00,000/– எதிர்மனுதாரர் மனுதாரரிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தாகவும், மேற்படி கடனுறுதி சீட்டில் கண்ட தொகையை வட்டியுடன் கேட்டு எதிர்மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி வழக்கில் மனுதாரர் / பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி எதிர்வழக்குரையை பரிசீலனை செய்யும் போது, கடந்த 11.06.2022–ல் எதிர்மனுதாரர் வாதியின் வீட்டிற்கு சென்று ரூ.7,00,000/– கடன் தொகை எதுவும் வாங்கவில்லை. மேற்படி கடனுக்கு ஆதரவாக வாதிக்கு கடந்த 11.06.2022 அன்று கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை. தாவா கடனுறுதி சீட்டில் கண்ட தொகைக் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. பிரதிவாதி குடும்பத்தை வாதி கஷ்டப்படுத்துவதற்காக வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்பதாகும்.

அடுத்ததாக, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த போது, தாவா வழக்கு விசாரணை வாதி தரப்பில் முடிவடைந்த நிலையில் மனுதாரர் / பிரதிவாதி ம.சா.ஆ.1 புரோநோட்டில் தன்னடைய கையெழுத்து இல்லை. மேற்படி கையெழுத்தை தடவியல் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும் என மனு தாக்கல் செய்திருக்கிறார். சர்ச்சைக்குரிய புரோநோட்டானது கடந்த 11.06.2022-ம் தேதியிட்டதாகும். மேற்படி தேதிக்கு முன்பாகவே பதிவு செய்யப்பட்ட மனுதாரர் / பிரதிவாதியின் கையெழுத்து அடங்கிய ஆவணங்கள் எதையும் சர்ச்சைக்குரிய புரோநோட்டில் உள்ள கையெழுத்தோடு ஒப்பீடு செய்வதற்கு மனுவுடன் இணைத்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மாறாக, சர்ச்சைக்குரிய புரோநோட்டையும், மனுதாரர் கையெழுத்து அடங்கிய வக்காலத்து மற்றும் எதிர்வழக்குரை ஆகியவைகளில் உள்ள கையெழுத்தை ஒப்பீடு செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதா? எனப் பார்க்கும் போது, எதிர்மனுதாரர் / வாதி தாவா கடன் தொகையைக் கேட்டு மனுதாரர் / பிரதிவாதிக்கு வழக்கு

தாக்கல் செய்வதற்கு முன்பாக கடந்த 22.09.2023 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார். மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. ஆக, வாதி தரப்பு வக்காலத்து, எதிர் வழக்குரையில் உள்ள கையெழுத்தை புரோநோட்டில் உள்ள கையெழுத்தோடு மாற்றப்படுவதற்கு வாய்புள்ளது. இதுசம்பந்தமாக, மனுதாரர் / பிரதிவாதி சர்ச்சைக்குரிய புரோநோட் அடங்கிய தேதியான 11.06.2022–ம் தேதிக்கு முன்பு பிரதிவாதியின் கையெழுத்து அடங்கிய பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் கேட்டும் மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. ஆக, மனுதாரர் / பிரதிவாதி நல்ல எண்ணத்தில் மனுவை தாக்கல் செய்யவில்லை. உண்மையில் வா.சா.ஆ.1 புரோநோட்டில் மனுதாரர் / வாதியின் கையெழுத்து அடங்கியிருக்கவில்லை என்றால் சர்ச்சைக்குரிய புரோநோட் தேதியான 11.06.2022 தேதிக்கு முன்பாகவே உள்ள மனுதாரர் / பிரதிவாதி கையெழுத்து அடங்கிய பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்து மேற்படி கையெழுத்தை சர்ச்சைக்குரிய புரோநோட்டிலுள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய வேண்டும் என நல்ல எண்ணத்தில் மனு தாக்கல் செய்திருப்பார். ஆக,

உரிய ஆவணங்கள் இன்றி இம்மனு தாக்கல் செய்துள்ளதால் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025—ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14—ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.14 17:36:14 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :—</u>**

---- இல்லை ----

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :—</u>**

---- இல்லை ----

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.14 17:36:27 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**I.A.No.3 / 2025 in**

**O.S. 391 / 2023**

**நேரிய / வரைவு / உத்தரவு**

**14.10.2025**